-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாலி மற்றும் பௌத்த கற்கை பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 ஆவது பிரிவு பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1979 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க பாலி மற்றும் பௌத்த கற்கை பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் 23 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 107 (5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில்154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளினூடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பில் கணக்காய்வாளரின் அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல்,

குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| ஏற்புடைய தரத்தின் தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம் ரூபா.9,387,358 ஆன நிலையான சொத்துக்கள் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டமை காணப்பட்டது. அதன்படி ஏற்பட்ட மதிப்பீட்டு குறைப்பாடுகளை இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | முற்றுமுழுதாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு தற்கால விலை மற்றும் இதன் பின்னரான பயனுள்ள ஆயுட்காலம் என்பன மீளாய்வு செய்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.100,000,000 ஆன மூலதன அளிப்புகள் தொடர்பில், இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளை அடையாளம் காணுதல் மற்றும் அளவிடல் மேற்கொள்ளப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் சீராக்குதல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் எட்டாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுகளின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு | முகாமைத்துவத்தின் அபிப்பிரயாம் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | | |
| நிலையான சொத்துக்கள் | 35,422,728 | 31,601,059 | 3,821,669 | துரிதமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய செவ்வைப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் |

வேண்டும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.23,028,123 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரெதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 2,045,577 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 25,073,700 அன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் அளிப்பகள் அதிகரித்தல் மற்றும் சுய நிதியிடல் கற்கைநெறிகளின் வருமானம் அதிகரித்தல் பிரதான காரணங்களாகியுள்ளன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) விற்பனை தொடர்பில் உரிய மதிப்பீடு-களை மேற்கொள்ளாது வெளியீடுகள் மற்றும் வார சஞ்சிகைகளை அச்சிடல் காரணமாக 2021 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த 900 வெளியீடுகள் மற்றும் வார சஞ்சிகைகளில், செலவினம் ரூபா.242,964 ஆன 851 வெளியீடுகள் மற்றும் வார சஞ்சிகைகளும், பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து அச்சிடப்பட்டிருந்த செலவினம் ரூபா. 516,849 ஆன 1.759 வெளியீடுகள் மற்றும் வார சஞ்சிகைகளும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் விற்பனை செய்ய இயலாது எஞ்சியிருந்தது. | கற்கை ஆண்டில் நிறுவன-த்தின் அனைத்து போதனை-களையும் இணையத்துடன் நேரடி தொடர்பு ஊடாக நடாத்திய படியால், மாணவ-ர்கள் நிறுவனத்திற்கு வருகை தரல் மட்டுப்படுத்தப்பட்டது. ஆகையால் புத்தகங்களின் விற்பனை குறைவடைந்தது. | சந்தைப்படுத்தல் தொடர்பாக உரிய மதிப்பீடுகளை மேற்கொண்டு வெளியீடுகள் மற்றும் வார சஞ்சிகைகளை அச்சிடல் வேண்டும். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டில் நிருமாணிப்பதற்கு தொடங்கியிருந்த நான்கு மாடி கட்டிடத்தின் வேலைகள் 2021 மே மாதம் 13 ஆம் திகதியில் முடிவுறுத்த வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதியிலும் அதன் வேலைகள் முடிவுறுத்தப்பட வில்லை. அதன் காரணமாக தற்போது நிறுவனம் பராமரிக்கப்பட்டு வரும் வாடகை கட்டிடத்தை மேலும் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்த-துடன், 2021 யூன் மாதம் தொடக்கம் | 2022 ஆம் ஆண்டில் புதிய கட்டிடத்திற்கு செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிருமாணிக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் நடவடிக்கைகளை மிக விரைவில் பூர்த்தி செய்துக்-கொண்டு அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

2022 ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் ரூபா .10,176,604 ஆன வாடகை செலுத்த வேண்டி ஏற்பட்டது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பெப்ருவரி 08 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடமாகவுள்ள கணக்கு வைப்பவர் பதவிக்காக 2022 ஏப்ரல் 29 ஆன கணக்காய்வு திகதி வரை ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பதவி தொடர்பில் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஆலோசனைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | தேவையான பதவிகளுக்கு மட்டும் ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறைகள் மற்றும் நல்லாளுகை

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் 03 பிரதான இலக்குகளின் கீழ் 12 செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்ட 12 செயற்பாடுகளில் 4 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதுடன், 07 செயற்பாடுகளின் முன்னேற்றம் 2% தொடக்கம் 57% வரை காணப்பட்டது. | 2020/2021 ஆண்டுகளில் கல்வி நடவடிக்கைகள் இணையத்தடன் நேரடி தொடர்பு ஊடாக மேற்கொணடாலும், திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் முற்றுமுழுதாக செயற்படுத்துவதற்கு கொரோனா தொற்று நோய் காரணமாக முடியவில்லை. | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |